**மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம்**

**கொழும்புப் பல்கலைக்கழகம்**

# வெற்றிடங்கள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்களை 2026-08-03ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / நிறுவனம் மற்றும் பொது நிர்வாகம், மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை மருத்துப் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (https://pgim.cmb.ac.lk). பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படும்.

முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது தகுதி மற்றும் அனுபவத்தை சரிபார்க்கும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட தேவையான விபரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதமான சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

## 01. முகாமைத்துவ உதவியாளர் (தரம் III) - 05 பதவிகள்
## Management Assistant

**தகைமைகள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்.
   - சிங்கள மொழி / தமிழ் மொழி
   - ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   - கணிதம்

   மற்றும்
2. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் (சாதாரண பொது வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல். (இந்த நோக்கத்திற்காக பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருந்தால் போதுமானது)
3. பின்வருவனவற்றில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத கணனி பிரயோகத்தில் (Computer applications) ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்.

   மற்றும்

   இ) computer application packages பயன்படுத்துவதில் இரண்டு வருட கால அனுபவம்.

**சம்பள அளவு** - 01.01.2025 ஆம் திகதியில் உள்ளவாறு மாதாந்தம் ரூபா 49,475 - 17x540 - 58,655

**தெரிவு செய்தல்** : பின்வரும் விடயங்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு ஈவு (IQ) மற்றும் பொது அறிவு
- கணனி ஆற்றல்

**வயது** : விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

## 02. வேலை உதவியாளர் (தரம் III) - 01 பதவி
## Works Aide

## 03. நூலக உதவியாளர் பதவி (தரம் III) - 01 பதவி
## Library Attendant

மேற்கூறிய 02ஆம் மற்றும் 03ஆம் இலக்கப் பதவிகளுக்கு பொதுத் தேவைப்பாடாக பின்வரும் மூலப் பிரமாணங்கள் ஏற்புடையதாகும்.

**தகைமைகள்:**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.சம்பள அளவு - 01.01.2025 (U PL 1(III) பிரகாரம் மாதாந்தம் ரூபா 42,775- 16x450 – 49,975

**தெரிவுசெய்தல்:** ஒரு தொழில் தேர்வு மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

## 04. வேலை உதவியாளர் (ஆய்வுகூட உதவியாளர் உட்பட) (தரம் III) - 01 பதவி
## Works Aide (Including Laboratory Attendant)

**தகைமைகள்:**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சம்பள அளவு - 01.01.2025 (U PL 1(III) பிரகாரம் மாதாந்தம் ரூபா 42,775- 16x450 – 49,975

**தெரிவுசெய்தல்:** ஒரு தொழில் தேர்வு மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஏனையவை:**

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,**

அ. இலங்கை பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

ஆ. நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்கான கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இ. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**பட்டப் பின்படிப்பு நிறுவனம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**
**2026-07-12.**